செ.வெ.எண் : 05/ஜுன் நாள்:02.06.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## குந்துகால் மீன்பிடி இறங்குதளம் அமைக்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் ஊராட்சி, குந்துகால் மீனவ கிராமத்தில், ரூ.70 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மீன்பிடி இறங்குதளத்திற்கான கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.06.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பிறகு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு, மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவித்திடும் வகையில் குந்துகால் பகுதியில் ரூ.70 கோடி மதிப்பில் புதிதாக மீன்பிடி இறங்குதளம் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மீன்பிடி இறங்குதளமானது சுமார் 500 விசைப்படகுகளை நிறுத்திட ஏதுவாகவும், மீனவர்கள் பிடித்து வரும் மீன்களை சேமித்து வைத்திட குளிர்பதன சேமிப்பு கிடங்கு வசதிகள், சாலை வசதி, மீன் ஏலக்கூட வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படுகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்துள்ளன. விரைவில் 100 சதவீதம் பணிகள் நிறைவேற்றப்பட்டு மீனவர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மேலும், மீன்பிடி இறங்குதளம் அமைப்பதனால் இப்பகுதியில் கடல் மண் அரிப்பு (Soil Erosion) ஏற்படாமல் தடுத்திடும் வகையில் புதிதாக தூண்டில் வளைவு அமைப்பதற்கு ரூ.1.87 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தூண்டில் வளைவானது 315 மீட்டர் நீளம், 1.60 மீட்டர் உயரம் அளவிற்கு அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் 2020-ஜுன் முதல் வாரத்தில் துவங்கப்படவுள்ளது.

மேலும், மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் இதுவரை 6,450 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 84 நபர்களுக்கு கொரோனா தொற்று உள்ளது எனவும், 6,287 நபர்களுக்கு தொற்று இல்லை எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. 79 நபர்களுக்கான பரிசோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளது. வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்றவர்களில் இதுவரை 51 பேர் பூரண குணமடைந்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 32 நபர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் அனைவரது உடல்நிலையும் சீராக உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மீன்வளத்துறை துணை இயக்குநர் திருமதி.எம்.வி.பிரபாவதி, உதவி செயற்பொறியாளர் (மீன்வளத்துறை) திரு.பெ.சிவக்குமார், வனச்சரகர் திரு.கோ.வெங்கடேஸ், வட்டாட்சியர் திரு.அப்துல் ஜபார் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**